# வினைதிறனான கற்றல் இடமாற்றத்தை முன்னெடுப்பதில் வகுப்பறைக் கற்பித்தலின் அவசியம் : ஒரு கல்வி உளவியல் பகுப்பாய்வு

[1]MAHIR I.L.M, [2]FATHIMA ASFA .J

[1] Senior Lecturer, Department of Social Sciences, South Eastern University of Sri Lank

[2] Undergraduate Student, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka

Jfathimaasfa995@gmail .com

**ஆய்வுச் சுருக்கம்**

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் கற்றல் இடமாற்றம் பயன்மிக்க கோட்பாடாகும். கற்றல் கோட்பாடுகளை வகுப்பறையில் செயன்முறைப்படுத்துவதற்கு கற்றல் இடமாற்றம் பற்றிய இக்கோட்பாட்டு விளக்கம் உதவும். அதாவது ஒன்றைக் கற்பதால் ஒருவனின் நடத்தையில் ஏற்படும் மாற்றம் நிரந்தரமானதாக இருக்க வேண்டுமாயின் அவன் அதனை மீண்டும் வெலிக்காட்ட வேண்டும். இவ்வாறு கற்றல் அல்லது அனுபவம் மூலம் பெறும் அறிவை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொள்வது கற்றல் இடமாற்றமாகும். இவ்வாய்வு கற்றல், கற்றலின் போது நிகழும் கற்றல் இடமாற்றம், இது பற்றிய பல்வேறு நோக்குகள், கற்றல் இடமாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், வகுப்பறை ஒன்றில் கற்றல் இடமாற்றததை மேற்கொள்வதில் ஆசிரியர்களின் பணிகள், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் கற்பித்தல் முறைகள். போன்றவற்றை உள்ளடக்கி வினைதிறனான கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்துவதில் வகுப்பறைக் கற்பித்தலின் அவசியத்தை பேசுகின்றது. இதற்காக விபரிப்பு முறை, பகுப்பாய்வு முறை போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட, பண்பு ரீதியான ஆய்வு என்பதால் இதற்கான தரவுகள், புத்தகங்கள்,சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணைத்தளக்குறிப்புக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** கற்றல், கற்பித்தல், கற்றல் இடமாற்றம், வகுப்பறைக் கற்பித்தல்.

## ஆய்வு அறிமுகம்

உயிர்களின் நகர்ச்சியை திறன்மிக்கதாக்குவதில் கற்றல் முக்கியத்துவமிக்கது. மனிதன் ஏனைய உயிரிகளை விடவும் கற்றலில் சிறப்புமிக்கவன். கற்றலின் மூலம் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு என்பன விருத்தியடைகின்றன. 'கற்றல் என்பது பயிற்சி, அனுபவம் என்பனவற்றின் அடிப்படையில் நடத்தையில் ஏற்படும் நிரந்தர மாற்றமாகும். (Mangal:1993). கற்றல் என்பது நீண்டதும் உறுதியாக நிலைத்து நிற்பதுமான ஒரு நடத்தை மாற்றமாகும். நம் செயல்கள் அனைத்திலும் எமது முன்னைய அனுபவங்கள், அதாவது முன்னைய

கற்றல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பொதுவாகக் குறிப்பிடுவதாயின், ஒவ்வொரு கற்றலும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஒருவரிடம் ஏற்படவுள்ள கற்றலுக்கோ அல்லது வாழ்கைத் தேவைகளுக்கோ உதவ வேண்டும் என்ற நோக்கம் கல்வித் திட்டத்தில் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு 'ஒரு நிலைமையில் பெறப்பட்ட அறிவு, திறன், மனப்பாங்கு என்பன பிறிதொரு நிலைமையில் பெறப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் அளவில் செல்வாக்குச் செலுத்தும் செயற்பாடு கற்றல் இடமாற்றம் எனப்படுகின்றது'(சின்னத்தம்பி, சுவர்ணராஜா:2011).

இக்கோட்பாட்டை முதலில் பயிற்சி இடமாற்றம் என அழைத்தனர். பின்னர் இது கற்றல் இடமாற்றம் என அழைக்கப்படலாயிற்று. ஆரம்பத்தில் இதனை முறையான ஒழுக்கம் அல்லது உளக்கட்டுப்பாடு அல்லது பயிற்சி இடமாற்றம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. உள ஒழுக்கம் என்ற இக்கருத்து 1890 களில் வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியலாளரால் விமர்சிக்கப்பட்டது. இருப்பினும் இது பற்றிய அதிகமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது புலன் இயக்கத் தொழிற்பாடுகள், பரப்பளவைக் காணும் காட்சி பற்றிய விளக்கங்கள், கவிதைகளையும், சொற்களையும் மனனஞ் செய்தல், எண்கணிதப்பிரச்சினை, கேத்திர கணிதப் பிரச்சினைகள் என்பனவற்றைத் தீர்ப்பதுடன் தொடர்பான தர்க்க ரீதியான சிந்தனைகள், தெளிவுத் தன்மை, பிழையற்ற தன்மை பற்றிய எண்ணக்கரு, இலத்தீன் மொழி, இலக்கணம், கேத்திர கணிதம் போன்ற பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடத்துறைகளில் இது மேலும் சோதனைக்குட்படுத்தப்பட்டு கற்றல் இடமாற்றம் பற்றிய மூன்று முக்கிய கோட்பாட்டாக்கங்கள் உருவாக்கம் பெற்றன. அவை நேரான கற்றல் இமாற்றம், எதிரான கற்றல் இடமாற்றம், கற்றல் இடமாற்றம் பெறாத சந்தர்ப்பங்கள் எனப்பட்டது (பெனடிக்ற் பாலன்:1996).

ஏலவே கற்ற ஒரு விடயம் பின்னொரு சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்பட்டால் அது நேரான கற்றல் இடமாற்றம் எனலாம். சிரில் பேர்ட் தனது ஆய்வில் 70% கற்றல் இடமாற்றம் நேராகவே நடைபெறுவதாகக் கண்டார். மேலும் ஒரு சூழ்நிலையில் பெறும் பயிற்சியானது வேறு ஒரு சூழ்நிலையில் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு இடையூறாக இருப்பின் அதனை எதிரான பயிற்சி இடமாற்றம் என்பர். 10% கற்றல் இடமாற்றம் எதிரானதாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார். இவை இரண்டும் இல்லாது முன்னைய கற்றலினதும் பின்னைய கற்றலில் செல்வாக்கு எதனையும் செலுத்தாத நிலை பூச்சிய இடமாற்றம் இருப்பதாகக் கொள்ளப்படும்.

**கற்றல் இடமாற்றம் பற்றிய கோட்பாடுகள்**

கற்றல் இடமாற்றம் முக்கியத்துவமுடையது என உணரப்பட்டதன் பிற்பாடு கற்றல் இடமாற்றம் பற்றிய பல ஆய்வுகள் இடம்பெற்றன. அதன் பேராக பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களும் கோட்பாடுகளும் உருவாகின. அவை முறையே உளப்பயிற்சிக் கொள்கை, ஒத்த மூலக் கொள்கை, பொதுமையாக்கல் கொள்கை, கெஸ்டால்ட் கொள்கை, கற்பதற்காக கற்றல்

பற்றிய கொள்கை என்பனவாகும். (சின்னத்தம்பி, சுவர்ணராஜா:2011) உளப்பயிற்சி கொள்கையையானது, கல்வி என்பது உளப்பயிற்சி என்றும், கல்வியால் பெறப்படும் அறிவை விட அதன் மூலம் பெறப்படும் உளப்பயிற்சியே முக்கியத்துவமுடையது எனக் கருதியது. இக்கருத்தின்படி விஞ்ஞானம், மொழி, போன்ற பாடவிதானங்களை அவதானிக்கும் திறனை வளர்ப்பவை என்றும், கணிதம் தர்க்கச் சிந்தனையை வளர்க்குமென்றும் கருதப்பட்டன. இதன்படி மனித உள்ளம் ஞாபகம், தர்க்கம், தீர்ப்பு, அவதானம் முதலிய தனித்தனி ஆற்றல்களை கொண்டுள்ளது என்றும் ஒவ்வொன்றையும் குறித்த சில பயிற்சிகளினால் விருத்தி செய்ய முடியுமென்ற அபிப்ராயம் நிலவியது. நவீனத்துவத்தின் பிற் கூறுகளில் தோண்டைக், வூட் வேர்த் ஆகியோர் விஞ்ஞான முறைப்படி அமைக்கப்பட்ட பரிசோதனைகள் மூலமாக உளப்பயிற்சிக் கொள்கைக்கு எதிராக வலுவான கருத்துக்களை முன்வைத்தனராயினும் அது நியாயயிப்புக்குள்ளாகவில்லை.

இரு கற்றல் நிலைமைகளுக்கிடையே பொதுவான தன்மை காணப்படுமாயின் அது ஒத்த மூலக் கொள்கை எனப்படும். ஒரு விடயத்தில் நிகழும் கற்றல் மற்றயதில் கற்றல் நிகழ சாதகமாக அமையும் எனவும், இரு கற்றல் நிலைமைகளுக்குமிடையே காணப்படும் பொது மூலகங்களின் எண்ணிக்கைக்கு விகிதசமமாகவே கற்றல் இடமாற்றத்தின் அளவும் காணப்படுமெனவும் இக்கொள்கை விளக்குகிறது. இது கற்கும் விடயப்பொருளில் அதிக அக்கறை காட்டுகின்றது என்றும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற கூறுகளாக ஒரு விடயத்தைக் கற்கும் நிலைமையை விளக்குவது போல் உள்ளது என்றும் இக் கொள்கைக்கு எதிராக விமர்சனங்கள் உருவாகின. இதன் பேறாக பொதுமையாக்கல் கொள்கை உருவானது. (சின்னத்தம்பி, சுவர்ணராஜா:2011)

பொதுமையாக்கல் கொள்கை என்பது குறித்த ஒரு கற்றல் நிலைமையில் பெறப்பட்ட பொதுக்கருத்துக்களும் கோட்பாடுகளும் பிறிதொரு கற்றல் நிலைமையில் ஏற்படும் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றன என விளக்குகின்றது. கெஸ்டால்ட் உளவியல் ஒத்த மூலக் கொள்கையை முற்றாக நிராகரித்ததோடு பொதுமையாக்கல் கொள்கையின் கருத்துக்களுக்குச் சார்பான நிலையினைப் பேணுகிறது. கற்றல் செயற்பாட்டின் போது பல்வேறு கூறுகளுக்குமிடையே அமைந்துள்ள தொடர்புகளைப் பற்றிய அகக்காட்சியானது கற்றல் இடமாற்றத்திற்கு அவசியமானது என கெஸ்டால்ட் வாதிகள் கூறுவர். இரு கற்றல் நிலைமைகளுக்கிடையே காணப்படும் ஒத்த புலக்காட்சித் தன்மையே கற்றல் இடமாற்றம் ஏற்படக் காரணமாகிறது. அதாவது குறித்த ஒரு கற்றல் நிலைமையில் பெறப்படுகின்ற எண்ணக்கருக்கள் அல்லது அகக்காட்சிகள் வேறுகற்றல் நிலைமைகளில் பயன்படுத்தப்படலாம் என்பது. இது ‘நிலை மாற்றுக் கொள்கை’ எனப்படுகிறது.

**வினைதிறனான கற்றல்**

கல்வி அமைப்பு முறை அதன் தொடக்கக் காலத்தில் ஆசிரியரை மையமாகவும் அவரது முழுமையான ஆதிக்கத்தின் பிரதிபலிப்பாகவும் காணப்பட்டது. இதை ஆசிரியர் மையக்கல்வி என்பர். ஆசிரியர்களில் பெரும்பாலோர் கற்கும் குழந்தையின் இயல்பு, அதன் வளர்ச்சித்

தேவைகள் போன்றவை பற்றியோ, கல்விச்செயல் முறையின் தன்மை பற்றியோ கவனத்திற் கொள்வதில்லை. கற்பித்தல் முறைகளில் எதேச்சாதிகாரம் காணப்பட்டது. மாணவர்கள் செயலற்ற நிலையிலும் ஆசிரியர் கூறும் விபரங்களை ஏற்கும் நிலையில் இருந்தனர். இதனால் கல்வி, கற்கும் குழந்தைகளுக்கு நன்மை பயப்பதற்குப் பதிலாக பெருமளவு தீமை பயக்கும் இம்முறைக்கு பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. ஜோன் டுவி போன்றோர் இதில் முதன்மையமானவராவார்கள். டுவியினது விமர்சனத்தின் படி பிள்ளையினுடைய வாழ்க்கைக்கும் அவனது அனுபவத்திற்கும் இடையிலான செயன்முறைத் தொடர்பு விளக்கப்படுவதை அவதானிக்க முடியும். (மாஹிர்&நப்லா:2018) இப்பின்னனியிலேயே மாணவர்களை மையமாகக் கொண்டும் அவர்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையிலும் கல்வி முறை அமையவேண்டும் என்ற கருத்து சாத்தியமாயிற்று.

ஆசிரியர் மையக் கற்பித்தலானது மாணவர் மைய கற்பித்தல் முறையாக வளர்ச்சி அடைந்தது. இதன் பேறாக மாணவர்களின் கற்றல் செயன்முறை வினைதிறனாக அமைய மாணவர் மையக்கல்வி முறை வழிகோலுகிறது. ஒரு ஆசிரியர் தமது கருத்துக்களை மாணவர்கள் மீது திணிக்க முற்படாது மாணவர்களின் சுயாதீன செயற்பாட்டிற்கு கற்பித்தலின் போது இடமளித்தல் அவசியமாகும். வினாவினை எழுப்புதல், விடை தேட முற்படுதல், பிரச்சினைகளைத் தீர்த்தல், விருப்பமற்றவற்றை தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கின்ற போது மாணவர்கள் மையப்படுத்தப்பட்டு ஆசிரிய அதிகாரம் தகர்க்கப்படுகிறது. 'உனக்கு பிடித்த பறவை எது?' என்று கேட்கப்படும் கேள்வியினை எடுத்துக்கொண்டால், அதில் பின்னனியாக நிச்சயமாக அவனுக்கு ஒரு பறவை பிடித்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் அமைந்திருக்கிறது. இதன் எதிரிடையாக அவனுக்கு 'பிடிக்காதவை' சிலவும் உண்டு என்ற அளவுகோலும் உட்கிடையாக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறெனில் ஒன்றை அவன் கட்டாயத் தெரிவு செய்தலுக்கு உட்படுத்தியிருக்க வேண்டும் என்பதிலிருந்து பன்மைத்தன்மையான தெரிவினை அங்கீகரிக்காத அல்லது எந்தவொரு பறவையையும் பிடிக்காமல் இருப்பதற்கான தான் சார்ந்த சுதந்திர மனநிலையைத் தடைசெய்யும் ஒற்றைத் தன்மையான முடிவை நோக்கிய நகர்ச்சியை கேள்விகள் வழியாக கட்டமைக்கப்படும் வன்முறை எனலாம். (மாஹிர்&நப்லா:2019). இத்தகைய நிலையை இல்லாமல் செய்வதே மாணவர் மையக் கற்றலின் முன்நிபந்தனையாகும்.

வகுப்பறையில் ஒரு ஆசிரியர் எந்த ஒரு தனிப்பட்ட கற்றல் கோட்பாட்டினையும் முழுமையாகச் சார்ந்து செயற்படாமல், யாவற்றையும் வகுப்பு நிலைமைக்கு ஏற்பச்சமநிலையுடன் ஆராய்ந்து பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு வளர்ச்சி மட்டுமே தங்களது பொறுப்பு என கருதாமல், குழந்தைகளது உடல் தேவைகள், குடும்பச்சூழ்நிலை, மனவெழுச்சி நடத்தைகள் போன்ற யாவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் சிறப்பாகக் கற்றலில் ஈடுபடத் தேவையான வகுப்புச் சூழ்நிலையினை தோற்றுவித்தல் ஆசிரியரது பொறுப்பாகும். இதன் மூலம் வினைதிறனான கற்றலை ஏற்படுத்த முடியும்.

**கற்றல் இடமாற்றம்**

கற்றல் இடமாற்றம் எனப்படுவது 'ஒரு நிலைமையில் பெறப்பட்ட அறிவு, திறன், மனப்பாங்கு என்பன பிறிதொரு நிலைமையில் பெறப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் அளவில் செல்வாக்குச் செலுத்தும் செயற்பாடு கற்றல் இடமாற்றம் எனப்படுகின்றது'(சின்னத்தம்பி, சுவர்ணராஜா:2011) அதாவது கற்றல் கொள்கையானது கற்றல் தொடர்பான ஓர் உள அமைப்பு ஏற்படுதல் மூலமாகக் கற்றல் இடமாற்றம் நடைபெறுகின்றது என்கிறது. ஒரே வகையான கற்றல் முயற்சிகளில் திரும்பத்திரும்ப ஈடுபடும் போது கற்பதற்கான ஒரு முறைமையை அதாவது எவ்வாறு கற்கவேண்டும் என்பது கற்றுக் கொள்ளப்படுகின்றது. இக் கொள்கைகளை நன்கு விளக்குவதன் மூலமாக ஆசிரியர்கள் தனது வகுப்பறை மாணவர்களில் சிறந்த கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற எதிர்பார்பே இதிலுள்ளது.

கற்றல் இடமாற்றத்தில் கற்கும் விடயங்களை ஒழுங்கு படுத்தல், கற்கும் முறை, விழுமியங்கள், கோட்பாடுகளில் பயிற்சிபெறல், கற்றல் தொடைகள், நுண்மதி, பணிகளின் ஒத்த இயல்புகள் போன்ற காரணிகள் செல்வாக்கு செல்வாக்குச் செலுத்துகின்றன. (பெனடிக்ற் பாலன்:1996) இக்காரணிகள் மூலமாக கற்றலில் இடமாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**கற்றல் இடமாற்றத்தை முன்னெடுப்பதில் வகுப்பறைக் கற்பித்தலின் அவசியம்**

ஒரு பாட விதானத்தை கற்பதன் மூலமாக இன்னொரு பாடவிதானத்தை இலகுவாகக் கற்கலாம் என்னும் கருத்து பிழையானது. ஒன்றை கற்பிக்கும் முறையிலேயே கற்றல் இடமாற்றம் தங்கியுள்ளது. இந்த வகையில் கற்றல் இடமாற்றத்தில் வகுப்பறைககற்பித்தல் மிகவும் அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. அதாவது இடமாற்றத்திற்கு வேண்டிய பொதுமைக் கருத்துக்கள், பொது முறைகள், மனப்பான்மைகள் ஆகியனவற்றை மாணவர்கள் அறிந்திருப்பதன் மூலமே கற்றலில் இடமாற்றம் இடம்பெறும். எனவே ஆசிரியர் கற்றலில் இடமாற்றத்தைக் கவனத்தில் கொண்டு கற்பித்தல் அவசியமாகு. கற்பிக்கும் விடயங்கள் பொருள் நிறைந்ததாகவும் பொதுமைக் கருத்துக்களைக் கொண்டனவாகவும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

நேர் நிலையான அல்லது நேரான கற்றல் இடமாற்றம் நடைபெறும் வகையில் பாடசாலைக்கல்வி அமைய வேண்டும் என்பது கல்வியின் ஒரு பிரதான நோக்கமாகும். ஆகவே குறிப்பிட்டது போல வகுப்பறையில் கற்பித்தலானது கற்றல் இடமாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற வேணடியது அவசியமாகும். கற்றல் இடமாற்றமானது கற்போனின் இயல்புகள், கற்றல் பணியின் தன்மை, கற்கும் முறைகள் என்பவற்றில் தங்கி உள்ளது. எனவே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர், கற்றல் இடமாற்றத்துடன் தொடர்புடைய இக்காரணிகளைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும். சிறந்த கற்றல் இடமாற்றத்தினை ஏற்படுத்தும் நோக்கில் கற்பித்தலை மேற்கொள்வது தொடர்பாக ஆசிரியர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. மாணவனின் தனியாள் இயல்புகள்:

மாணவர்கள் நுண்மதி, ஊக்கல், உளப்பாங்கு, தன்மை போன்ற இயல்புகளில் ஒருவருக் கொருவர் வேறுபட்டவர்களாக காணப்படுவர். உயர் நுண்மதி உடையவர்கள் தமது அனுபவங்களிலிருந்து பொதுமைப்படுத்தல்களை இலகுவாகப் பெறும் ஆற்றல்களையும், கற்றுக்கொள்கின்ற விடயத்தின் பல்வேறு கூறுகளுக்கிடையே உள்ள தொடர்புகளை இலகுவில் இனங்காணும் ஆற்றலையும் அதிகளவில் கொண்டிருப்பர். அக்கறையும் விருப்பும் கலந்த மனப்பாங்குடன் பாடசாலை செல்லும் மாணவனிடம் ஏற்படும் கற்றல் அவனது மனத்திலும் நிலைத்திருக்கும். எனவே, இவ்வாறான தனியாள் வேறுபாடுகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் பாடவிடயப்பொருளை ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவது ஆசிரியரின் பணியாகும். மேலும், வகுப்பறையில் கற்கும் விடயத்தை வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்த முடியும் என்னும் மனப்பாங்கினை மாணவர்களிடம் ஏற்படுவதனையும் ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.

2. கற்கும் பணிகளின் இயல்பு:

மாணவன் கற்றுக்கொள்கின்ற விடயதானங்களுக்கிடையே ஒத்த தன்மைகள் காணப்படும்போதும் அவை ஒத்த வகைகளாக இருக்கும்போதும் கற்றல் இடமாற்றம் உயர்நிலையுடையதாக இருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. அதாவது மாணவன் கற்கின்ற ஆரம்பப் பணிகளின் வகை, இயல்புகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.முதன்மைக் கற்றலானது அவனது அடுத்தடுத்த கற்றல் நடவடிக்கைகளிக்கும், விடயதானங்களை விளக்குவதற்கும் பயன்படக்கூடிய வகையில் அல்லது எதிர்கால கற்றல் விடயங்களுடன் ஒத்துப்போகின்ற வகையில் அமைகின்ற போது கற்றல் இடமாற்றம் பயனுள்ளதாக அமையுமெனலாம்.

3. கற்கும் முறைகள்:

ஒரு மாணவன் பாடவிதானத்தைக் கற்கின்ற முறையானது அவனிடத்தில் ஏற்படும் கற்றல் இடமாற்றத்தில் அதிகளவு செல்வாக்கினைச் செலுத்துகின்றது. சில சந்தர்ப்பங்களில் பின்பற்றப்படும் பொருத்தமற்ற கற்றல் முறையானது பின்னர் ஏற்படும் கற்றலுக்கு இடையூறாகவும், எதிர் நிலை இடமாற்றமாகவும், அமைந்து விடலாம் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

4. ஆரம்ப பணியில் கற்றலின் அளவு:

முாணவர்களிற்கு போதுமான பயிற்ச்சி கிடைக்காத சந்தர்ப்பங்கள், எதிரான கற்றல் இடமாற்றம் ஏற்படுவதற்கான நிலைமையை உருவாக்கும். எனவே, ஒரு நிலைமையில் பெறப்படும் கற்றலானது பிறிதொரு நிலைமையில் கற்றலைத் துரிதப்படுத்த அல்லது இலகுவாக்க வேண்டுமாயின், ஆரம்பப் பணியில் அவனுக்கு அதிகளவு பயிற்சியை வழங்க வேண்டும். புதிய எண்ணக்கருக்கள், திறன்கள் என்பவற்றைக் கற்க ஆரம்பிக்கும் காலத்தில், இது முக்கியமாகும். மாணவன் கற்கும் சகல பாடவிதானங்களும் சமமான முக்கியத்துவம்

பெறுவதில்லை. எனவே, பிந்திய கற்றல்களுக்கு முக்கியமானவை எனக் கருதப்படும் விடயங்களில் மாணவர்கள் அதிகளவு பயிற்சியைப் பெறவேண்டும். பாடத்தில் மாணவரது கவனத்தை அதிகரிக்கும் ஊக்குவிப்பு முறைகளைக் கையாளுதல், கற்கும் பணியின் முக்கிய இயல்புகளைச் சுட்டிக்காட்டுதல், பெயரிடுதல் போன்றவற்றை செய்தல், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் ஆகியவற்றுக்குப் பல உதாரணங்களை வழங்குதல் போன்ற செயல்களுடாக மாணவனின் ஆரம்பப் பணிகளின் கற்றலின் அளவினை உயர்த்த முடியும் எனலாம்.

5. பொதுக்கோட்பாடுகளின் விளக்கம்:

குறித்த சூழ்நிலையில் நிகழும் கற்றலானது இன்னொரு சூழலில் நிகழும் கற்றல் நிலைமைக்குப் பிரயோகிக்கப்படுவதற்கு முன்னதாக, ஆரம்பப் பணியில் காணப்படும் பொதுக்கருத்துக்களை மாணவர் முழுமையாக விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும். பொதுக் கருத்தையோ அல்லது கெஸ்டால் வாதிகள் குறிப்பிடுவது போன்ற அகக்காட்சி முறைக் கற்றலையோ ஆரம்பப் பணியில் மாணவன் பெற்றிருக்க வேண்டும் உதாரணமாக, கணித பாடத்தின் பிரச்சினங்களில் பல குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இக்குறியீடுகளுக்குப் பதிலாக வேறு குறியீடுகளை அவ்வகைப் பிரச்சினங்களில் புகுத்தினாலும், எவ்வித தடங்கலுமின்றி மாணவன் அவற்றினை விளங்கிக்கொள்வானாயின் அவனிடம் பொதுக்கருத்துக்கள் ஏற்பட்டுள்ளன என அறியலாம்.

**முடிவுரை**

கற்றல் என்பதை நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றமாகும்.இதனடிப்படையில் அத்தகைய மாற்றம் வினைதிறனாக அமைய வேண்டுமெனில் நிகழுகின்ற கற்றல் இடமாற்றம் நிலைபேறானதாக அமைய வேண்டும். வகுப்பறைக் கற்பித்தலே மாணவர்களின் செயற்பாடுகளில் பெரும்பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் வினைதிறனான கற்றல் இடமாற்றத்தை முன்னெடுப்பது வகுப்பறைக்கற்பித்தலில் மிக முக்கிய பங்களிக்கிறது. இதன்படி கற்றலின் போது மாணவர்களன் அறிவு, திறன், மனப்பான்மை என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு சிறந்த கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்துவதில் வகுப்பறையானது மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது எனலாம். கற்றல் இடமாற்றத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் வழிகாட்டல் முக்கியமானது என்பதைப் போல் மாணவர்களின் பங்கு கொள்ளும் விருப்பமும், முன்வருதலும் முக்கியமானதாகும். எனவே, பல்வேறு தனித்தன்மைகளையும், நுண்ணறிவு வேறுபாடுகளையும் கொண்ட மாணவர்களை மையமாகக் கொண்ட மாணவர் மையக்கல்வியாக வகுப்பறைக்கற்பித்தல் அமையப்பெறுகின்ற போது வினைதிறனான கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கவும் முடியும்.

**உசாத்துணைகள்**

Anita Woolfolk, (2006), Educational Psychology, Dorling Kindersley (India) Pvt. Ltd, Licensees of Pearson Education in South Asia

Hager,P., (2005), Philosophical accounts of learning, Educational Philosophy and Theory, 37 (5), 649-66

Haskell,R.E., (2001), Transfer of learning: cognition, instruction and reasoning (San Diego, Academic Press).

Lave, J., (1996), Teaching, as learning , in practice, Mind, Culture and Society, 3(3), 149 – 164

Mangal, s.k., (1997) , Advanced Educational Psychology, Prentice-Hall of India Private Limited:New Delhi

சாகுல்ஹமீது, வி.எம்., (2007), கற்பித்தல் கற்றலில் உளவியல், சென்னை: சாரதா பதிப்பகம

சின்னத்தம்பி, க., சுவர்ணராஜா, க., (2011), அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், சேம்மேடு பொத்தகசாலை: கொழும்பு

முத்துலிங்கம், ச., (2010), கல்வியும் உளவியலும், கொழும்பு: சேமமடு பதிப்பகம்

பெனடிக்ற் பாலன், யோ., ''கல்வி உளவியல் அடிப்படைகள்'', சென்னை: த்வனி

**கட்டுரைகள்**

மாஹிர், ஐ.எல்.எம், பாத்திமா நப்லா, கே.எல், (2018), கல்வி மெய்யியலில் ஜோன் டுயி இன் அனுபவக்கற்றல் முறைமை, இந்தியா: நவீனத் தமிழாய்வு, பன்னாட்டுப் பன்முக தமிழ் காலாண்டு ஆய்விதழ், ப.ப 885 – 890.

மாஹிர், ஐ.எல்.எம், பாத்திமா நப்லா, கே.எல், (2019), கற்றல் - கற்பித்தலில் அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கும் வன்முறை – ஒரு கல்வி மெய்யியல் நோக்கு. இந்தியா: செம்மொழித் தமிழாய்வு, பன்னாட்டுப் பன்முக தமிழ் காலாண்டு ஆய்விதழ், ப.ப 705 – 711.